விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆவணி 4 ஷவ்வா 19 இதழ் 187
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 20-8-1981

இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம், தங்களது விற்பனை முகவர்களாக எம்மை நியமனம் செய்துள்ளது. உங்களுக்குத் தேவையான சிப்போட், பிளைவூட் வகைகளுக்கும் கதவுகளுக்கும்
ராம்ஸன்ஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்
19, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 508

எம்மிடம்.....
இறக்குமதிசெய்யப்பட்ட
றெக்சின் குளோத்
பிளாஸ்டிக் குளோத்
(F) போமிக்கா சீற்
பொலித்தீன் வகைகள்
ஒட்டுப்பசை வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறலாம்.
H. ESMAILJEE & Co
71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

# இன, மத, கட்சி வேறுபாடின்றி கடும்தண்டனை விதிக்கப்படும்

## அமைச்சரவையில் ஜனாதிபதி

### "நாட்டில் ஏற்பட்டது இனக்கலவரம் அல்ல; ஆனாலும் அரசுக்கு இதனால் அவப் பெயரே"

(கொழும்பு)

நாட்டில் அண்மையில் நடைபெற்றது இனக்கலவரம் அல்ல என்றும், முன்னர் எப்பொழுதும் நிகழாத விந்தையான கலவரமாக இது தோன்றுகிறது என்றும், வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் மீது இன, மத, கட்சி வேறுபாடின்றி உறுதியானதும், நீதியானதுமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாட்டில் அண்மையில் நடைபெற்ற வன்முறைச்சம்பவங்கள் குறித்து நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அமைச்சர்களுடன் நீண்ட நேரமாக ஆலோசனை நடத்தினர்.

வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் மீது உறுதியானதும் நீதியானதுமான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமானது என்று ஜனாதிபதி நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் வலியுறுத்தினர்.

வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் அவற்றைத் தூண்டியவர்கள், கொள்ளை, தீவைப்பு ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டவர்கள் என நிரூபிக்கப்படும் பட்சத்தில் எவராக இருந்தாலும் அவர்கள் மீது இன மத கட்சி வேறுபாடின்றி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசு எம்பிக்களானாலும் கடும் தண்டனை விதிக்கப்படும் என்றும் ஜனாதிபதி

[6ம் பக்கம் பார்க்க]

## கூட்டணியின் 5 கோரிக்கை: அரசு ஏற்றுள்ளது?

[கொழும்பு]

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் தாம் சமரசப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவில்லை என்றும் நாட்டின் இன்றைய நிலை குறித்தே தாம் பேச்சு நடத்தியதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அரசதரப்பில் அமைச்சர்கள் திரு வாளர்கள் லலித் அத்துலத்

[6ம் பக்கம் பார்க்க]

## சுதந்திரக்கட்சித்தலைமையகக்கட்டடம்: கைப்பற்றுவதில் இழுபறி

[கொழும்பு]

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தைக் கைப்பற்றுவதில், நேற்று பெரும் இழுபறி ஏற்பட்டது.

நேற்றுக் காலை திரு. மைத்திரிபால சேனநாயக்கா, திரு. அனுரா பண்டாரநாயக்கா குழு, தலைமை அலுவலக கட்டடத்தின் பூட்டைத் திறந்து, கூட்டம் நடத்தி, கட்சியின் செயலாளர் திரு. ரதனசிறி விக்கிரமநாயக்காவை நீக்கி, திரு. அனுரா பண்டாரநாயக்காவை சுதந்திரக்கட்சியின் பதில்செயலாளராக நியமித்தது.

இதனைத் தொடர்ந்து அலுவலகக் கட்டடத்தின் பூட்டைப் பூட்டிவிட்டு, திறப்பைப்பொலிஸாரிடம் கையளித்ததுடன், அலுவலக கட்டடத்தில் சிலரை பாதுகாப்புக்காகவும் நிறுத்தினர்.

நிலைமை இவ்வாறிருக்க, திருமதி சிறிமா பண்டாரநாயக்கா குழுவினர் நேற்றுப் பிற்பகல், மேற்படி அலுவலகக்

[6-ம் பக்கம் பார்க்க]

## வன்முறைச் சம்பவங்கள்: வெளிநாட்டுத் தொடர்பு பற்றி ஆராய விசேட உயர்மட்டக் குழு

[கொழும்பு]

நாட்டின் நடைபெற்ற வன்முறைச்சம்பவங்களுக்கு வெளிநாட்டுத் தொடர்புண்டா என்பது குறித்து விசேட உயர் அதிகாரிகளைக்கொண்ட குழு ஒன்று விசாரணை நடத்தும் என்று அமைச்சரவை பேச்சாளர் திரு ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதென்றும் திரு. அல்விஸ் தெரிவித்தார்.

நாட்டின் வன்முறைச் சம்பவங்களுடன் வெளிநாட்டுத் தொடர்பு இருக்கின்றதெனக் கண்டுபிடிக்கும்பட்சத்தில் அந்த வெளிநாட்டுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார். [ம-இ]

## திருமணத் திருமுகம்

மணமகன் வண்ணை ஆனந்தன் — மணமகள் தேவி

இடம்: வீரசிங்கம் மண்டபம்

காலம்: 24-08-81 திங்கள் பி.ப. 5 முதல் 8 மணி வரை

தலைவர்: தமிழர் முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் தம்பதிகள்

முன்னிலையாளர்: தமிழர் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. திரு. வி. ஆனந்தசங்கரி பா. உ.

வரவேற்பாளர்: மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன்
மாநகர உறுப்பினர்: திரு.சோ.சிவரத்தினம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்பாளர்:
அறவழிப்போராட்டக் குழு.

(0669)

## 1980 ஜூலை 17-ல் கடமையாற்றிய அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியருக்கு திடீர் சம்பள உயர்வு!

[கொழும்பு]

1980ம் ஆண்டு ஜூலை மாதம் 17ம் திகதி வேலைக்குச் சென்ற சகல அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் விசேட சம்பள உயர்வு வழங்குவதென்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

உயர் அதிகாரிகள் தவிர்ந்த ஏனைய அரச ஊழியர்களுக்கான இந்தச் சம்பள உயர்வு இவ்வாண்டு ஜூலை மாதம் 11ம் திகதி முதல் வழங்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். [ம]

## 5000 மாணவர் ஊர்வலம்

சென்னை ஆக. 19

இலங்கையில் தமிழர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும் என்று கோரி பல சுலோகங்களைத் தாங்கி ஐயாயிரம் மாணவர்கள் இன்று சென்னையில் மாபெரும் ஊர்வலத்தை நடத்தினர்.

இம்மாணவர்கள் பின்னர் சென்னையிலுள்ள இலங்கைத் தூதுவரகம் சென்று மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

## முன்னர் சாட்சியமளித்த சிலர் மீது இராணுவமுகாமில் மீண்டும் விசாரணை!

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் பகுதியில் நிகழ்ந்த வன்முறைச்சம்பவங்கள் தொடர்பாக உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகள் குழு முன்னிலையில் முன்னர் சாட்சியமளித்த சிலர் இராணுவ முகாம் ஒன்றுக்கு மீண்டும் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மருதனார்மடத்தைச் சேர்ந்த ச. சுப்பிரமணியம் உடுவில் உள்ளூராட்சி மன்ற காவலா

[6-ம் பக்கம் பார்க்க]

### மணிவாக்கு

விஷம் நீண்டப்பெற்ற தேகத்துக்கு ஆரோக்ய மில்லை. அஹங்காரம் தீண்டபெற்ற ஆத்ம சாதகனுக்கு முக்தியில்லை.

# நமது நோக்கு

## பாராளுமன்ற ஆட்சிமுறையை புனரமைக்குக

இன்று கூடும் பாராளுமன்றம் முழுச் சபையைக் கொண்டிருக்குமோ என்பது சந்தேகம்!

கடந்த பல கூட்டங்கள் சுமுகமாக நடைபெறவில்லை என்பதும் ஆவேசமான விவாதங்களை கண்டுள்ள காலம் என்ற உணர்வும் பொதுமக்கள் மனத்தில் நிலவுவது நியாயமே!

மக்கள் ஆட்சியின் மகத்துவ சின்னம் பாராளுமன்றம் என்பதை நாட்டின் பாமர மக்கள் நேரில் கண்டது 1956-ம் ஆண்டு அமரர் பண்டாரநாயகாவின் எம். ஈ. பீ. ஆட்சியிலென்பது மறுப்பதற்கில்லை. முதலாவது கூடிய பாராளுமன்றக் கூட்டத்தில் எவ்வித வஞ்சனையுமின்றி சபாநாயக ஆசனத்தில் பார்க்க ஒருவர் அமர்ந்தார்; எம். பிக்களின் ஆசனத்தில் பல பொதுமக்கள் அமர்ந்தனர்.

இதனால் பரபரப்பு எழுந்தபோது, பிரதமர் பண்டாரநாயகா பொதுமக்களின் சுதந்திர உணர்வின் குதூகலத்துக்கு பங்கம் விளைக்க முயலவில்லை; அவரும் சேர்ந்து குதூகலித்தார்; பரந்த அரசியலறிவும் பொதுமக்களை மதிக்கும் உணர்வும் கொண்ட செயல் இது.

தனிச்சிங்களச் சட்டம் பெரும் சண்டமாருத வாதத்தைக் கிளப்பியதும், எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா அந்த நடைபெற்ற கருத்துப் பரிமாற வாதத்தை எழுப்பிவைத்து சபையின் இதமான அரசியல் திருப்பங்கள், அவர்களின் கருத்து நிறைந்த பேச்சுக்கள், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மைகள், சிந்தனையில் — இவையெல்லாம் இன்று புனைகதைபோல் தோன்றும்.

இருந்தும் இதுவே இந்நாட்டின் இன்றைய முதற் தேவை. பகிஷ்கரிப்புகளோ, வெளிநடப்புகளோ நாம் பெரிதுபடுத்தி இங்கு குறிப்பிடவில்லை.

எந்த ஜனநாயக ஆட்சியிலும் இவையெல்லாம் அனுமதிக்கப்பட்ட — சில சமயங்களில் அவசியமான — இன்னும் சில வேளைகளில் பேச்சிலும்பார்க்க வலிமை பெற்ற நடைமுறைகளாகும்.

நாம் இங்கு வற்புறுத்துவது பாராளுமன்றத்தின் பூரணத்துவத்தை; ஒரு குடும்பம், இரண்டாகப் பிரிந்து தனது நலத்திற்காக வாதாடும் — ஏன் போராடும் விளையாட்டைப்போல் உய்ப்புடை விளையாட்டாக விருக்கவேண்டுமென்பதைப்!

விளையாட்டில் வெற்றி தோல்வி சகஜம்; பலத்த பக்கம் பந்தயத்தில் வெற்றியடைவது யாவருமறிந்ததே. அதற்காக இனிமேல் விளையாட்டு நிறுத்தப்படுவதா?

தோல்வியடைந்தவரை விட்டுத்துரத்தி—பனையாலே விழுந்தவரை மாடேறி மிதிக்கும் வகையில் அமைந்த அந்தவிளையாட்டையும் எவரும் விரும்புவதில்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக திரு ஜே. ஆர் ஜெயவர்த்தன பதவியில் அமர்ந்த பின் அவருடைய நீண்டகால பாராளுமன்ற அனுபவமும், விவாதக்குத்தரிய சாதுரியமும், நெருக்கடியைச் சிரித்துச் சமாளிக்கும் சமயோசித ஆற்றலும் இன்று சபை காணாக்காட்சிகள்!

இன்று நிலவும் அமைதியற்ற— அழகற்ற, ஆன்மீகப் பலமற்ற சூழ்நிலையை நீக்கி, அரசாங்கமும், எதிர்க்கட்சிகளும் மீண்டும் ஒருங்குபட்டுச் சபையைச் சிறப்பிக்க. பாராளுமன்ற ஆட்சி முறையில் பெரும் நம்பிக்கை கொண்ட ஜனாதிபதி முன்வருவாராக!

## யாழ். மாவட்ட அபிவிருத்தி

மாவட்ட அபிவிருத்திச் சபையில் நம்பிக்கை கொண்ட நாட்டு மக்களில் யாழ்ப்பாண மக்கள் பெரும் பங்கு கொண்டனர்.

இதன் விளைவாக நிகழ்ந்த துன்பங்களை ஒருபுறம் வைத்து, ஆக்க பூர்வமான செயல்களுக்கு ஆவார்க்க வேண்டுமென்பதையே இப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

நாட்டின் வேறு பகுதிகளில் நடைபெறும் அபிவிருத்திச்சபைக் கூட்டங்கள் பிரச்னைகளை நனைக்கச் சுமக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றன போலத் தெரிகிறது.

வடபகுதி, இதற்கு மாறுபட்ட வகைகளில் சாதகமான சூழ்நிலை பெற்றுள்ளது; சவாலை ஏற்று வெற்றி காணும் வகையில், சபை திட்டங்களை வகுத்து நிறைவேற்றுக்குழுவின் ஆற்றல் அவற்றை அமுல் படுத்தும் பணியில் துரிதப்பட வேண்டும்.

ஒரு முகப்பட்ட அபிவிருத்திச் சபை, அரசியல் அனுபவம், நேர்மை, நிதானம் கொண்ட தலைவர்- ஆற்றல் அனுபவம், நேர்மை வாய்ந்த செயலாளர் - பல ஆற்றல்படைத்த அதிகாரிகள் - பொதுமக்கள் ஒத்துழைப்பு- இவையெல்லாம் யாழ். மாவட்டத்தின் வரவு செலவுத்திட்டத்தில்- வரவில் எழுதப்படவேண்டியவை

எல்லோருக்கும் எல்லாந் தெரியுமென்ற மெட்டில் பேசத் தலையிட - அனாவசிய கண்டனம் வழங்க என்றும் தயாராகவிருத்தல் எங்களின் விசேட குறைபாடு.

மாவட்ட அபிவிருத்தி சபை, மாநகர சபை, பட்டினசபை — இவையெல்லாம் ஒற்றுமைப்பட்டு இயங்கப் பழகவேண்டும்—அது தொடக்கத்தில் புதுப் பழக்கமாகத்தானிருக்கும். தத்தம் பொறுப்புகளை மறந்து மற்றவரது பொறுப்புகளில் மனம்போவது எங்களின் இன்னொரு ஆற்றல் இதன் சாதனைகளை நினைக்க நடுக்கம் ஏற்படும்.

மாநகரசபை நகரத்தோடு நின்றுவிட வேண்டுமென்று நாம் கோடிடவில்லை. அபிவிருத்திசபை யாழ் நகரத்தின் வளர்ச்சியைக் கவனிக்கத் தேவையில்லையென்று கருதவில்லை. ஆனால் தம்முடைய முக்கிய பணியை முதலாகக்கொண்டு, அரசியல் பிரசாரத்தை மட்டுப்படுத்தி முன்னேற முயலவேண்டுமென்பதே எமது கருத்து.

உண்மையில் யாழ் மாவட்ட அபிவிருத்தி, மத்திய அரசு வழங்கும் அதிகாரங்களில் பெரிதும் தங்கியிருக்கிறது.

மக்களை அடிப்படையாக வைத்துத் தீட்டும் திட்டங்கள் வெற்றி பெறவேண்டுமானால், வறுமையென்னும் கொடுமையை நீக்கவேண்டுமானால், மாவட்டசபை அதிக அதிகாரங்களைப் பெற்றிட வேண்டும்.

மத்திய அரசின் மான்யம் பெறும் தாழ்ந்த நிலைமையை நீக்க தக்க பாதுகாப்புகள் பெறவேண்டும்.

நிதி உதவியில் ஏனைய நிலையைக் கொழும்பில் குடிகொண்ட அரசு உருவாக்குமானால், அபிவிருத்தியென்பது கண்துடைப்பாய் முடியுமென்பதை அறிக.

தமிழ் மக்களின் தடம்புரண்ட இன்றைய நிலைக்கு யாழ்ப்பாண மாவட்டசபை "ஒருநாளும் தளர்வறியா மனத்தை" மக்கள் விருத்தி செய்ய உதவுவதில் கங்கணம் கட்டவேண்டும்.

# வடபகுதி நோக்கி மலையக, தென்னிலங்கை அகதிகள்

[யாழ்ப்பாணம்]

தென்னிலங்கையிலும், மலையகத்திலும் பாதிக்கப்பட்ட அகதிகள் வடபகுதி நோக்கி வந்தவண்ணமிருக்கின்றனர்.

நேற்று முன்தினம் பஸ்ஸிலும், ரயிலிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 60 குடும்பங்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளன.

இக்குடும்பங்களைச் சேர்ந்த சிலர் வவனியாவில் தங்கியுள்ளனர். மீதிக் குடும்பங்கள் தங்கள் உறவினரிடம் தஞ்சம் புகுந்துள்ளனர்.

நேற்றையதினம் யாழ் இந்துக்கல்லூரியில் முகாம் அமைத்து, சகல வசதிகளும் செய்து கொடுப்பதற்கு சமூகசேவைப் பகுதி, யாழ் லயன்ஸ் கழகம், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தயாராகி எதிர்பார்த்திருந்தனர். ஆனால் இதுவரை வந்தவர்கள் தங்கள் உறவினரின் ஆதரவை நாடியே சென்றுள்ளனர். இதனால் இதுவரை இம்முகாமில் எவரும் அகதிகளாகத் தங்கியிருக்கவில்லை. [மா]

## தேசிய ஒற்றுமைக்கு உழைத்த தலைவர்

சிங்களத் தலைவர்களில் தேசிய ஒற்றுமையைப் பேணி வளர்க்கவும், தமிழ் மக்கள் சிங்கள மக்களின் சகோதரர்கள் என்றும், நாட்டின் ஏனைய இனங்களும் ஒன்றுபட்டு வாழ வேண்டுமென்றும் பெருவிருப்பம்கொண்டவர் சேர் சென ரத்குணவர்த்தன.

பௌத்த சமயத்தில் ஊறி அதன் போதனைகளைச் சாதனைகளாக்க வாழ்நாளும் பாடுபட்ட இப்பெரியார் அரசியல் தந்திரத்துறையில் அமோக வெற்றி கண்டார்.

பல எதிர்ப்புகள் மத்தியில், இலங்கைக்கு ஐ நா. சபையில் அங்கத்துவம் பெற உதவிய இவரின் விடாப்பிடியான வாதம் வரலாறுமிக்க சாதனையாகும். பௌத்த மதத்தின் அடிப்படைக் கொள்கைகள் ஐ நா சபையின் மனித உரிமை சாசனங்களில் இடம் பெறச் செய்த வீரன்.

பௌத்த மதமே நாட்டின் உத்தியோகபூர்வமான மதமென மன உறுதிகொண்டவர், மற்ற மதங்களுக்கு வேண்டிய பாதுகாப்பை வழங்கவேண்டுமென்ற பரந்த மனப்போக்கு உடையவர். நாட்டின் இன்றைய நிலை குறித்து பெருங்கவலை கொண்ட பெரியார். இத்துன்பச் செயல்கள் தொடரப்படாதென்ற குரலை எழுப்பியே உயிர் நீத்தார்.

அவரின் ஆதமா சாந்தியடைக.

—சபாபதி நமசிவாயம்

## அம்பாந்தோட்டையிலிருந்து 200 தமிழ் அகதிகள் மட்டுநகர் வந்தனர்

[மண்முனை - மட்டு. நிருபர்]

அம்பாந் தோட்டையிலிருந்து சுமார் 200 மலையகத் தமிழர்கள் நேற்று முன்தினம் அகதிகளாக மட்டக்களப்பு வந்து சேர்ந்தனர்.

இவர்களின் இருப்பிட வசதிக்காக மண்டூர் கந்தசுவாமி கோவில்பகுதியல் முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தாம் பிறந்து வளர்ந்த வீடுகளையும், உடைமைகளையும் இழந்த நிலையில் மட்டக்களப்பு வந்து சேர்ந்த இவர்கள் தமது கண்ணீர்க் கதையை மட்டக்களப்பு அரசாங்க அதிபரிடமும் மற்றும் கூட்டணித் தலைவர்கள் பிரமுகர்களிடமும் எடுத்துக் கூறினார்கள்.

வன்முறைகளை அடுத்து சில தினங்கள் காடுகளுக்குள் ஒளிந்திருந்த பின்னரே தாம் மட்டக்களப்பு திரும்பியதாக இவர்கள் தெரிவித்தனர்.

பட்டிருப்பு எம். பி. திரு: பி கணேசலிங்கம், மட்டக்களப்பு மாவட்ட சபைத் தலைவர் திரு. சி. சம்பந்தமூர்த்தி, உறுப்பினர்கள் திருவாளர்கள் அல்பேர்ட் சிவரத்தினம், கே. மாணிக்கம், காசி ஆனந்தன் ஆகியோரும் அகதிகளைச் சென்று பார்வையிட்டு அவர்களுக்கு உணவு வசதிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தனர். [இ]

### கற்புலத்து அம்பாள் இலட்சார்ச்சனை பூர்த்தி:

## "இலங்கையில்எங்கும் நான் இச்சிறப்பைக்கண்டதில்லை"

### —பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள்

கொக்குவில், நந்தாவில் அருள்மிகு கற்புலத்து மனோன்மணி அம்பாள் இலட்சார்ச்சனை பூர்த்திவிழா மிகவும் சிறப்பாக நடந்தேறியது. முதல் பத்து நாட்களும் மாலையில் ஆலய பிரதமகுரு திரு. நா. முத்துக்குமாரசாமிக குருக்கள் மேற்பார்வையில் நவசக்திக மகாமண்டபத்தில் இருக்க; மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்ட உட்புற வீதியுள் எல்லாம் தோரணங்களாலும், மாலைகளாலும், வாழைகளாலும், கரும்புகளாலும் பொலிந்து விளங்கின பட்டுடைகளுடன் பஞ்சகச்சம் தரித்த சிவப்பிராமண உத்தமர்



கொக்குவில் கிழக்கு நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்புமிகு லட்சார்ச்சனையில் கலந்துகொண்ட சிவாச்சாரியார்கள் ஆலயப் பிரதம குரு நா. முத்துக்குமாரசாமி குருக்களுடன் வீதிஉலம் வந்தபோது எடுக்கப்பட்ட படம்.

ளுக்குரிய முறையில் நல்ல கிரியைகளுடன் ஒன்பது சிவப் பிராமணக் குருக்கள் மாரால், லலிதா சகஸ்ராம நாமாவளிகளும் சொல்லி பத்திரங்களாலும், புஷ்பங்களாலும் ஸ்ரீ மனோன்மணி அம்பாளுக்கு அர்ச்சனைகளும், வேதபாராயணம், ஸ்தோத்திரம், ஆசீர்வாதம் முதலியவற்றுடன் கூடிய தீபாராதனைகளும், உபசாரங்களும் இனிது நிகழ்ந்தன. கணபதி ஹோமமும், கடஸ்தாபனமும் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அம்பாளுக்குரிய வழமையான பூஜையுடன் சண்டிகா ஹோமம் ஆரம்பமாகியது. சிறப்புற அமைக்கப்பட்டதொரு ஓமகுண்டமும், சகஸ்ர சங்காபிஷேகத்துக்குரிய முறையில் அலங்காரமாக சங்குகள் வைத்த மேடை ஒழுங்குகளும், கள் வேதபாராயணம், ஸ்தோத்திரங்கள் செய்ய, விசேட பல அர்ச்சனைகளும் நடந்தன. அதன்பிறகு மகா

[6-ம் பக்கம் பார்க்க]



இன்று நல்லூர்க் கந்தன் 16-ம் திருவிழா

முருகன் றனிவேல் முனிநங்
குருவென்
றருள் கொண்ட றியா
ரறியுந்தரமோ
உருவன் றருவன் றுளதன்
றிலதன்
றிருளன் றொளியன்
றெனநின் றதுவே
—கந்தரநுபூதி.

# இலங்கைத் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு

# இந்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

புதுடில்லி ஆக. 19 "வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட இலங்கையிலுள்ள தமிழ்பேசும் மக்களின் பாதுகாப்பிற்கு இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்."

மேற்கண்டவாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் புதுடில்லியில் நேற்று பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்த பொழுது கேட்டுக்கொண்டார்.

"இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்களினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களேயாவர். தமிழர்களுக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு இராமச்சந்திரன் திருமதி காந்தியைக் கேட்டுள்ளார். (இ)

## பத்திரிகையாளருக்கு ஒய்வூதியம்; இலவசவைத்தியம்!

சென்னை, ஆக. 19 ஓய்வுபெறும் பத்திரிகையாளர்களுக்கு பென்சன் வழங்கும் திட்டமொன்றை தமிழ்நாடு அரசு கொண்டு வரவுள்ளதாக செய்தித் துறையமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் தெரிவித்தார்.

இதற்கான நல் சட்ட மூலமொன்று விரைவில் தயாரிக்கப்படவுள்ளதாகவும், பத்திரிகையாளர்களுக்கு இலவச வைத்திய சேவையும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (வெ)

ஈரானியரோந்துப்படகு கடத்தல்:

## கடத்தல் காரருக்கு பிரான்ஸில் புகலிடம்!

தெஹ்ரான், ஆக. 19 ஈரானிய ரோந்துப் படகை கடத்திச் சென்றவர்களுக்கு பிரான்ஸ் அரசியல் புகலிடம் அளிக்கவுள்ளது.

மத்தியதரைக் கடலிலுள்ள "மாசெல்" துறைமுகத்தில் எரிபொருள் நிரப்பிய பின்னர் கடத்தல்காரர்கள் இப்படகை வெடி வைத்துத் தகர்க்கப் போவதாக தெரிவித்ததைத் தடுத்து, இப்படகில் ஈரான் செல்லவிருந்த 30 பேர் இத் துறைமுகத்தில் இறங்கிவிட்டனர்.

ஆயுதம் தாங்கிய இந்த 25 கடத்தல்காரர்களும் பிரான்ஸில் தங்க விரும்பாவிட்டால் இவர்கள் வேறொரு நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என பிரான்ஸ் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (வெ)

## எண்ணெய் விலை அதிகரிக்காது?

ஜெனிவா, ஆக. 19 சவூதி அரேபியா எண்ணெய் விலையை அதிகரிக்காதென்று அந்நாட்டின் எண்ணெய்த் துறை அமைச்சர் ஜனூப் ஷேக் ஜமானி தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் பத்திரிகையாளர்களிடமே அவர் இவ்வாறு தெரிவித்தார். சவூதி அரேபியா ஒரு பீப்பா எண்ணெயை தற்போது 32 டொலராக விற்பனை செய்து வருகிறது. (வெ)

இஸ்ரேலுக்கு

## குண்டுவீச்சு விமானங்கள்: றீகன் அங்கீகாரம்!

வாஷிங்டன் ஆக 19 இஸ்ரேலுக்கு நவீன குண்டு வீச்சு விமானங்களை வழங்குவதற்கு அமெரிக்க ஜனாதிபதி திரு றீகன் அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

இஸ்ரேலுக்கு விரைவில் நவீன குண்டுவீச்சு விமானங்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. அலெக்சாண்டர் ஹெய்க் தெரிவித்தார்.

இஸ்ரேல் கடந்த ஜூன் மாதம் ஈராக்கின் அணுசக்தி நிலயத்தின் மீதும் பெய்ரூத் நகரங்கள் மீதும் நடத்திய குண்டுவீச்சு தாக்குதல்களைத் தொடர்ந்து அந்நாட்டிற்கு நவீன யுத்த விமானங்களை வழங்குவதில்லையென்று அமெரிக்கா முடிவு செய்திருந்தது தெரிந்ததே.

அமெரிக்க ஜனாதிபதி றீகன் தனது பாதுகாப்பு அதிகாரிகளுடன் நேற்று நடத்திய ஆலோசனைக் கூட்டத்தைத் தொடர்ந்து இஸ்ரேலுக்கு மீண்டும் யுத்த விமானங்களை வழங்குவதென்று தீர்மானித்துள்ளார். (வெ)

## சினிமா தியேட்டர் தீக்கிரை

சென்னை, ஆக. 19 செங்கல்பட்டு மாவட்டத்தில் நேற்று சினிமாத்தியேட்டரொன்று தீக்கிரையானது.

இதுதொடர்பாக தற்போது விசாரணை நடைபெற்று வருகிறது. (வெ)


## சவூதி மன்னருக்கு ஜே. ஆர். அன்பளிப்பு

(கொழும்பு)

ஒருசோடி மாணிக்கம், வாசனைத் திரவிய மரக்கன்றுகள், ஆகியவற்றை சவூதி அரேபிய நாட்டிற்கு ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன அன்பளிப்பார்.

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு செப்டெம்பர் மாதம் 5ந் திகதி தனது பாரியாருடன் புறப்படவுள்ள ஜனாதிபதி, சவூதி மன்னர் காலித்துடன், இலங்கைக்கான பொருளாதார உதவிகள் பற்றி முக்கிய பேச்சுவார்த்தைகளை நிகழ்த்தவுள்ளார்.

ஜனாதிபதியின் விஜயம் சம்பந்தமான முன்னேற்பாடுகளைக் கவனிக்கும் பொருட்டு நிதியமைச்சர் தலைமையிலான விசேட குழுவொன்று சவூதி அரேபியாவிற்கு செப்டெம்பர் முதலாந்திகதி பயணமாகவுள்ளது.

உங்கள் சவாரிக்கு சிங்கர்

சவாரிக்குச் சிறந்ததோர் சைக்கிள் சிங்கர்

TEAM

சிங்கர் சைக்கிள்



சிங்கர் சைக்கிள் — சிங்கரின் பாரம்பரிய சிறப்பியல்புகளைக் கொண்டது.

சகல சிங்கர் காட்சியறைகளிலும் கிடைக்கும்

சிங்கர் (ஸ்ரீ லங்கா) லிமிட்டெட்,

விலை ரூபா 1,075/- (லக்கேஜ் இல்லாதது) இலகு தவணைக் கட்டண வசதியுண்டு.

அல்லைப்பிட்டி துப்பாக்கிச் சூட்டு மரணம்:

# கொலை எனத் தீர்ப்பு

[ஊர்காவற்றுறை]

அல்லைப்பிட்டியில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின்போது பலியான இளைஞரின் மரணம் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதமன்றத்தில் நீதிபதி திரு. சி. கே. என். திலகா முன்னிலையில் நடைபெற்ற மரண விசாரணையை அடுத்து இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

அல்லைப்பிட்டி வங்களாவடி ரோட்டில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் போது மரணமான கரம்பன் மடத்தைச் சேர்ந்த கந்தசாமி சிறிஸ்கந்தராசாவின் [வயது 25] மரண விசாரணையின்போது சாட்சியமளிக்க, சம்பவத்தை நேரில் கண்டவரான கதிரியாம்பிள்ளை பிச்சையா கூறியதாவது:

இம்மாதம் 9ம் திகதி மாலை நாலரை மணியளவில் நான் ஒரு மரணவீடுக்குப் போய் விட்டு வந்து முழுகிக்கொண்டிருக்கும்போது கார் ஒன்று வந்து அல்லைப்பிட்டி வங்களாவடி ரோட்டில் நின்றது. காரிலிருந்து தனபாலசிங்கம் என்பவர் துப்பாக்கியுடன் இறங்கி எனது மருமகன் கந்தசாமியின் வீட்டுக்கு அருகில்போய் மீண்டும் காரில் ஏறினார். கந்தசாமியின் சகோதரர் இறந்தவரின் சகோதரியை திருமணம் செய்தவர். நான் குளித்துவிட்டு குசினியில் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது 'விடு விடு' என்ற சத்தம் கேட்டது. நான் உடனே சாப்பாட்டை விட்டு விட்டு வந்து பார்த்தபோது இறந்த சிறிஸ்கந்தராசாவும் தனபாலசிங்கமும் துப்பாக்கியுடன் இழுபறிப்பட்டுக் கொண்டு நின்றார்கள். அப்போது எனது மகன் ஜெயக்கொடியும் தனபாலசிங்கத்துடன் வந்த சந்திரனும் இடையில் புகுந்து ஜெயக்கொடி துவக்கை எடுத்தார். நான் அவர்களிடம்சண்டைபிடியாது போகும்படி கூறினேன். தனபாலசிங்கம் எனது மகனிடம் இருந்து அவக்கை வேண்டிக் கொண்டு காருக்குக்கிட்டே போனார். சந்திரனும் தனபாலசிங்கத்துடன் போனார். காருக்குப்போனதும் காரினுள் இருந்து தோட்டாஒன்றை எடுத்து துவக்கில் போட்டார். நான் அவரை நோக்கி தம்பி இது கூடாதவேலை வேண்டாம் என்று கூறினேன் அப்போது அவர் எனக்கு துவக்கால் ஒங்கி ஏதும் கதைத்தால் உன்னையும் சுடுவேன் என்று கூறினார்.

பின் ரோட்டால் இறங்கி சிறிஸ்கந்தராசாவை நோக்கிச் சுட்டார். சூடுபட்டதும் சிறிஸ்கந்தராசா உடனே விழுந்து விட்டார். தொடர்ந்து தனபாலசிங்கம் காருக்குக்கிட்டே வந்து இன்னுமொரு தோட்டாவை எடுத்துப்போட்டுக் கொண்டு சிறிஸ்கந்தராசா விழுந்துகிடந்த இடத்துக்குக் கிட்டேபோய அவருக்கு மேலே குத்திப்பிடித்து திரும்பவும் சுடுவதைக் கண்டேன். நான் சுட்டாபோட்டாய் என்று குழறினேன் அதற்கு அவர் நீ சாட்சி சொன்னால் இந்தச் சூடு தான் உனக்கும் விழும் என்று கூறினார். பின் அவரும் சந்திரனும் காரில் (ஸ்ரீ என். 9525) ஏறிச்சென்றுவிட்டார்கள் தனபாலசிங்கம் காரில் ஏறும்போது அவரது சேட்டில் இரத்தக் கறை இருப்பதைக் கண்டேன்.

இவரைத் தொடர்ந்து ஆறுமுகம் சிவஞானம், பிச்சையா ஜெயக்கொடி ஆகியோரும் சாட்சியமளித்தனர். மாவட்ட வைத்திய அதிகாரி ஜெயபால் சோமசுந்தரம் வைத்தியப்பரிசோதனை நடாத்தினார். மாவட்ட நீதிபதி கொலை என தீர்ப்பளித்தார். தொடர்ந்து புலன்விசாரணை நடைபெறுகின்றது. (இ)

## இலங்கையில்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

தேவி குரிய மகாமான்மியக் கதைகளுடன் கூடிய சண்டிகா ஹோமஸ்துதிகள் படிக்கப்பட்டு, ஆகுதிகளும் செய்யப்பட்டன.

அன்னை லலிதாம்பிகை அருட்பேராயிரத்துடன் அஷ்டோத்தரமும் படிக்கப்பட்ட அர்ச்சனைகளும் விசேட பூஜைகளும், தீபாலங்காரங்கள், உபசாரங்கள், புஷ்பாஞ்சலி, வெள்ளிருபாக்களால் ஸ்வர்ண புஷ்பாஞ்சலி எல்லாம் செய்யப்பட்டு மிகவும் விமரிசையாக நடந்தேறின.

சிவானந்தகுருகுல அதிபர் சிரோமணி பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகளும், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இந்து நாகரீகபீடத் தலைவர் பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்களும், பிரம்மஸ்ரீ சி. நாராயணசாஸ்திரிகளும் இன்னும் பல சிவப் பிராமண உத்தமப் பெரியோர்களும் அன்னைலலிதாம்பிகை அருட்பேராயிரம் படிக்க உதவியும், அர்ச்சனைகளில் பங்குபற்றியும் சிறப்பித்தார்கள்.

''இலங்கையில் இவ்விதமான ஒரு சிறப்பான இலட்சார்ச்சனை வைபவத்தையும் அருள்மிகு மனோன்மணிதேவி கொலுவிருந்த சிறப்பையும், சுமங்கலிகள் திருவிளக்கு எடுத்து வரிசையாக அமர்ந்து தேவியை வணங்கிய சிறப்பான காட்சியையும் வேறெங்கிலும் எனது 60 வயதுகாலத்தில் கண்டதில்லை'' என்று பேராசிரியரும், சாஸ்திரிகளும் அருளுரையுடன் யாவற்றையும் புகழ்ந்து கூறியது எல்லோரையும் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கச் செய்தது.

-ஆர். கந்தையா

## இன, மத...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வலியுறுத்தினார்.

அண்மையில் நடந்த இக்கலவரத்தினால் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசியல் வாதிகளின் அறிக்கைகள், பேச்சுக்கள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அறிக்கைகள் வெளியிடும் போதும் வைபவங்களில் உரையாற்றும்போதும் அமைச்சர்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும் என்று ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

''நூற்றுக்கு நூறு எமது அரசை ஆதரிக்கும் யாழ்ப்பாணத் தமிழர்கள் அல்லாத முஸ்லிம் மக்களும் தோட்டத் தொழிலாளர்களும் இந்த வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர் இச்சம்பவங்களில் எவர் சம்பந்தப்பட்டிருந்தாலும் அரசுக்கே இது அவப்பெயராகும்'' என்றும் ஜனாதிபதி கூறினார். [ம-இ]

## கூட்டணி...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

முதலி, எஸ். தொண்டமான், ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ், திசநாயக்க ஜயரத்ன, ரணில் விக்கிரமசிங்க, ஜனாப் எம். எச். முகமட் ஆகியோரும் எதிர்க்கட்சித்தலைவருடன் திருகோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன், பேராசிரியர் ஏ. ஜே. வில்சன், கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### 5 அம்சக் கோரிக்கை

பாராளுமன்ற பகிஷ்கரிப்பு தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி அரசுக்கு சமர்ப்பித்த 5 அம்சக்கோரிக்கை குறித்த இப்பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட்டதாகவும் 5 அம்சக்கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாக ஜனாதிபதி தம்மிடம் உறுதி அளித்துள்ளதாகவும் திரு. அமிர்தலிங்கம் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார்.

எனினும் எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடின் தமிழர் விடுதலைக் கூட்டணி தொடர்ந்தும் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்துவரும் என்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

கலாநிதி வில்சன் வடக்கு-கிழக்கு மாவட்ட சபைகளின் நடைமுறைகள் பற்றியே பேச்சுவார்த்தை நடத்தினார் என்றும் அவர் கூறினார். [ம]

## இருஷ்ணஜெயந்தி

[யாழ்ப்பாணம்]

யாழ். வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமான் தேவஸ்தான ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்திவிழா இம்மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி முதல் நடைபெறவிருக்கிறது.

விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் கண்ணன் ஜனனம் பற்றிய கதாப்பிரசங்கமும் இடம்பெறும்.

மறுநாள் திங்கட்கிழமை மாலை உறியடி உற்சவமும் இடம்பெறும். [இ]

## லயன்ஸ் கழகம் இருப்பிடவசதி அளிக்கும்

[பச்சிலைப்பள்ளி]

எழுதுமட்டுவாளில் இடம் பெற்ற சமூக மோதலின் போது பாதிப்படைந்த குடும்பங்களுக்கு இருப்பிட வசதிகளைச் செய்து கொடுக்க சாவகச்சேரி லயன்ஸ் கழகம் முன் வந்துள்ளது.

இதற்கு சாவகச்சேரிப்பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் 500 ரூபா அன்பளிப்பு செய்து நிதியினை ஆரம்பித்து வைத்தார்.

## குதிரை இறக்குமதி வரி 5 ஆயிரமாகக் குறைப்பு

[கொழும்பு]

குதிரை இறக்குமதி வரியை 20 ஆயிரம் ரூபாவிலிருந்து 5 ஆயிரம் ரூபாவாகக் குறைப்பதென்று அமைச்சரவை நேற்றுத் தீர்மானித்தது.

குதிரைப்பந்தயம் இலங்கையில் ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை என்றும் இது தொடர்பான பிரசுரங்களே தடைசெய்யப்பட்டன என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் திரு ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்தார். [ம-இ]

## ...னுவ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளர் கே. நாதன் ஆகிய இருவருமே ஆயுதப்படையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனராம். சமார் 5 நாட்களாக இவர்கள் இருவரும் தங்கள் வீடுகளுக்கு திரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது.

முன்னர் சாட்சியமளித்த சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவரான வைரவிப்பிள்ளை ரகுநாதன் திரும்பவும் விசாரணைக்குழைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. [மா]

## சுதந்திர கட்சி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கட்டடத்துக்கு வந்து தம்வசமுள்ள திறப்பினால் பூட்டைத் திறந்து, சில நிமிடம்வரை அங்குகூடி நிலைமையை ஆராய்ந்த விட்டு வெளியேறினர்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தை இப்பொழுது பொலிஸார் காவல்புரிகின்றனர். [ம]

## லோகசபையில் எதிரொலித்த ஈழத்தமிழர் பிரச்னை

புதுடில்லி, ஆக. 19

இலங்கைத் தமிழர் பிரச்னை இன்று இந்திய பாராளுமன்றத்தில் [லோகசபை] எதிரொலித்தது.

பாராளுமன்றத்தில் இன்று பிற்பகல் அங்கத்தவர் ஒருவரின் கவன ஈர்ப்பு பிரேரணை மீது வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் பேசுகையில், இலங்கைத் தமிழர் பிரச்னை உள்நாட்டுப் பிரச்னை என்றாலும் அரசாங்கம் விரைவில் நியாயமான முறையில் தீர்த்து வைக்கும் என்று இந்திய அரசு நம்புவதாகவும் இலங்கை இந்திய வம்சாவழியினர் பற்றி இந்தியத்தூதுவர் உடனுக்குடன் இந்திய அரசுக்கு அறிக்கைகள் அனுப்புவதாகவும் இச்சம்பவங்கள் குறித்து அவர் இலங்கை அரசின் கவனத்துக்கும் கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழர்கள் மிகவும் மோசமாகத் தாக்கப்படுவதாகவும், இனக்கலவரம்நடப்பதாகவும் லோக்சபா உறுப்பினர் ஒருவரும் வேறு மூவரும் சபையில் குற்றம்சாட்டியிருந்தனர்.

## யாழ். நிலைமை

[யாழ்ப்பாணம்]

நாட்டின் நிலைமை குறித்து யாழ். மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா, மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு சு நடராசா, மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். தர்மபாலன் ஆகியோர் யாழ். செயலகத்தில் நேற்றுக் கூடி ஆராய்ந்தனர்.

யாழ். மாவட்டத்தில் அமைதியும் சமாதானமும் நிலவுவதாக இக்கூட்டத்தில் உறுதி செய்யப்பட்டதாகவும், அகதிகள் முகாம் அமைக்கும்பட்சத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டதாகவும் தெரிகிறது. [மா]

## சமயச் சொற்பொழிவு

[உரும்பராய்]

உரும்பராய் கருணாகரப்பிள்ளையார் கோவிலில் இன்று நடைபெறும் மணவாளக்கோலத் திருவிழா இரவு நிகழ்ச்சியாக திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலத்தின் சொற்பொழிவு இடம்பெறும். 'திருமுறைச்செல்வம் என்னும் பொருள்பற்றி இவர்பேசுவார். விசேஷ மேளக்கச்சேரியும் இடம் பெறும்.

காலையில் நடராஜப் பெருமானுக்கு அஷ்டோத்தர சதசங்காபிஷேகம் நடைபெறும் இரவு மூர்த்திகள் திருவீதி உலாவரும்.

# அசம்பாவித சம்பவங்கள் 2-வது நாளாக இல்லை

## பொலிஸ் மாஅதிபர் தகவல்

[கொழும்பு]

அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வந்தபின்னர் 2வது நாளாக பெருமளவில் எதுவித அசம்பாவித சம்பவங்களும் நாட்டின் எப்பகுதியிலும் நிகழவில்லை என்று பொலிஸ் மா அதிபர் திரு. அனா செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாகவும் திரு. செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

நீண்டதூர ரயில்கள் இராணுவ பாதுகாப்புடன் சேவையிலீடுபட்டுள்ளதென்றும் அவர் தெரிவித்தார். [இ]

மட்டக்களப்பு மாவட்டம்:

# தமிழ் அரசாங்க அதிபர் நியமிக்க பிரேரணை?

[மட். மண் - நிரு]

மட்டக்களப்பு மாவட்டத்துக்குத்தமிழர் ஒருவரை அரசாங்க அதிபராக நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரும் பிரேரணை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திசபையின் அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படலாம் எனத்தெரிகிறது.

இம்மாதம் 28-ம் திகதி நடைபெறும் சபைக்கூட்டத்தில் இப்பிரேரணை கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதால் கடந்த கூட்டத்தைப் பகிஷ்கரித்த கூட்டணி எம். பி யும் உறுப்பினரும் இக்கூட்டத்திற்கு வருவார்கள் என நம்பப்படுகிறது. [இ]

# மாணவன் பரிதாப மரணம்

[யாழ்ப்பாணம்]

மோட்டார் சைக்கிள் பழகிய இளைஞர் ஒருவர் மின் சாரக்கம்பத்துடன் மோதி ஸ்தலத்திலேயே மரணமானார்.

இவருக்குப் பின்பக்கமாக இருந்து பிரயாணம் செய்தவர் எம். நவீபன் [16 வயது] 'ஹெல்மட்' அணிந்திருந்ததால் சிறுகாயங்களுக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி ஆலடிச்சந்தியில் நேற்று முன்தினமிரவு இச்சம்பவம் நடைபெற்றது.

யாழ். மத்தியகல்லூரி மாணவனான எஸ். சூரியகுமார் [வயது 17] என்பவரே மரணமானவராவார்.

திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. எஸ் எஸ் பிரான்சிஸ் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் என். சரவணபவானந்தனுக்கு பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

ஈழநாடு

தொலைபேசி எண்கள்

ஆசிரியர் பகுதி 389
விளம்பரம், விநியோகம் 7707

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஓகஸ்ட் 20-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 47, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.